

இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வியாழக்கிழமை 21.05.2026


# ஹலோ சி.எம்.சார்...

**ஹலோ சி.எம்.சார்... கடந்த ஒரு வார காலம் தமிழ்நாடு உங்களது ஆட்சிக் காலத்தில் எப்படி ஆகி இருக்கிறது தெரியுமா? உங்களது தூய ஆட்சியில் ரத்தக் குவியல்கள் எத்தனை நடந்திருக்கிறது தெரியுமா? எத்தனை குற்றச்சம்பவம் நடந்திருக்கிறது தெரியுமா?**

★ நாகப்பட்டினத்தில் அடுத்தடுத்து 2 பேர் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தால் மக்கள் அச்சம் அடைந்துள்ளார்கள். நாகப்பட்டினம் ரயில் நிலையம் அருகே 38 வயது மதிக்கத்தக்க ஆண் சடலம் கண்டெடுப்பு. நாகை அரசு தலைமை மருத்துவமனை அருகே 45 வயது மதிக்கத்தக்க பெண் சடலமாக கண்டெடுப்பு. இருவரது உடல்களிலும் காயங்கள் இருப்பதால் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என மக்கள் அச்சம்.

★ திருத்துறைப்பூண்டியில் சட்டவிரோதமாக லாட்டரி விற்பனை செய்ததாக 3 பேர் கைது செய்யப்பட்டுள்ளார்கள். 160 லாட்டரி சீட்டுகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் லாட்டரி விற்பனைக்குத் தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில், த.வெ.க. ஆட்சிக்கு வந்த பிறகு சட்டவிரோதமாக லாட்டரி விற்பனை அமோகமாக நடந்துள்ளது. சட்ட விரோதமாக லாட்டரி விற்பனை செய்பவர்களிடம் இருந்து ரூ.2.5 லட்சம் பணம், 4 செல்போன், 3 ஏ.டி.எம். கார்டுகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

★ கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் அருகே நகைக்கடையின் பூட்டை உடைத்து 70 சவரன் தங்க நகைகள் மற்றும் 7 கிலோ வெள்ளி கொள்ளையடிக்கப் பட்டுள்ளது. அரிவாள் உள்ளிட்ட பயங்கர ஆயுதங்களுடன் வந்த கொள்ளையர்கள், திருட்டைப் பார்த்து சப்தம் போட்டவர்களுக்கு கொலை மிரட்டல் விடுத்துள்ளார்கள்.

★ கன்னியாகுமரி மாவட்டம் தக்கலை அருகே நிதி நிறுவனம் நடத்த அரசின் அனுமதி பெற்றுத் தருவதாகக் கூறி ரூ.1.75 லட்சம் மோசடி செய்த த.வெ.க. நிர்வாகி ஜெகதீஷ் கைது செய்யப்பட்டுள்ளார்.

★ திருவாரூர் வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் உதவியாளராகப் பணியாற்றி வந்த சுரேஷ் என்பவர் வீடு கட்ட அனுமதி வழங்க ரூ.7000 லஞ்சம் பெற்றதாகப் புகார் எழுந்தது. லஞ்சம் பெற்ற புகாரில் லஞ்ச ஒழிப்புத்துறை போலீசார் கைதுசெய்து விசாரணை செய்தபோது அலுவலக 3வது மாடியிலிருந்து குதித்து சுரேஷ் தற்கொலை முயற்சி செய்தார். மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்ட நிலையில், சிகிச்சை பலனின்றி சுரேஷ் உயிரிழந்தார். அரசு ஊழியர்கள் மத்தியில் இது அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

★ தூத்துக்குடியில் 3 நாளில் 3 பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். தூத்துக்குடி தாளமுத்து நகர் அருகே இளைஞர் கொலை செய்யப்பட்ட வழக்கில் 4 பேர் கைது செய்யப்பட்டு உள்ளனர்.

★ திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி அருகே 4 கிலோ கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. ஆந்திராவில் இருந்து கஞ்சாவை கடத்தி வந்த 2 பேரை கைது செய்து திருத்தணி காவல்துறையினர் விசாரணை நடந்தி வருகிறார்கள்.

★ சென்னை திருவொற்றியூரில் 2.5 கிலோ கஞ்சாவை இருசக்கர வாகனத்தில் எடுத்துச் சென்ற 3 பேர் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

★ சென்னை புதுவண்ணாரப்பேட்டையில் வீட்டில் கஞ்சா செடி வளர்த்த பட்டதாரி இளைஞர் கைது செய்யப்பட்டுள்ளார். அவரது வீட்டில் த.வெ.க. கொடி பறக்கவிடப்பட்டுள்ளது.

★ சேலம் மாவட்டம் மேட்டூர் அருகே இருசக்கர வாகனத்தில் வைத்து கஞ்சா விற்பனையில் ஈடுபட்டவர் கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடம் இருந்து 1.10 கிலோ கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

★ ஆவடியில் 140 கிலோ கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளார்கள். ஒடிசாவில் இருந்து மோட்டார் சைக்கிள் ரைடர்கள் போல் கஞ்சா கடத்தி வந்ததாக அவர்கள் ஒப்புக் கொண்டார்கள். இவர்களிடம் இருந்து 2000 வலி நிவாரண மாத்திரைகளும் பறிமுதல் செய்யப்பட்டு உள்ளன.

★ திருப்பெரும்புதூர் அருகே இருவர் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள். பட்டப்பகலில் இந்த சம்பவம் நடந்துள்ளது. மணிமங்கலம் அடுத்த அம்மணம் பாக்கம் கிராமத்தில் லோகேஷ் என்பவரின் வீட்டில் இருந்த கானா பாடகர்கள் பரத், சீனு ஆகியோரை வெட்டிப் படுகொலை செய்தார்கள். இருசக்கர வாகனங்களில் ஹெல்மெட் அணிந்து வந்த 6 பேர் கொண்ட மர்ம கும்பல் இதனைச் செய்துள்ளது.

★ திருச்சி காஜாமலை பகுதியில் கல்லூரி மாணவியை இளைஞர் ஒருவர் கல்லால் கொடூரமாகத் தாக்கிய வீடியோ வெளியாகி அதிர்ச்சியை ஏற்படுத்தியது. கொடூரமாகத் தாக்கிய இளைஞரை பொதுமக்கள் சுற்றிவளைத்து காவல் நிலையத்தில் ஒப்படைத்தனர். திருச்சியில் காவல்துறை ஐ.ஜி. அலுவலகம் மற்றும் காவல் கண்காணிப்பாளர் அலுவலகம் எதிரில் இக்கொடூரச் சம்பவம் நிகழ்ந்துள்ளது.

★ தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டியில் காதல் விவகாரத்தில் காதலி கண் முன்னே காதலனுக்கு கத்திக்குத்து விழுந்துள்ளது. காதலியின் தந்தை மற்றும் உறவினர்கள் நடத்திய தாக்குதலில் காயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட இளைஞர் சஞ்சய் சிகிச்சைப் பலனின்றி உயிரிழந்துள்ளார்.

★ புதுக்கோட்டை மாவட்டம் கறம்பக்குடி அருகே மாற்றுத்திறனாளி பெண்ணை 2 பேர் காரில் கடத்தி பாலியல் தொல்லை கொடுத்துள்ளார்கள். குற்றவாளியைக் காவல்துறை கைது செய்யவில்லை. மக்கள் சாலை மறியல் செய்த பிறகு கைது செய்துள்ளார்கள்.

★ கோவை இருகூர் அருகே 13 வயதே ஆன பள்ளிச் சிறுவன் நண்பர்களால் அடித்துக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

★ திருநெல்வேலி ராமையன்பட்டி விலக்கு காவல்துறை செக் போஸ்ட் மீது பெட்ரோல் குண்டு வீசப்பட்டுள்ளது. காவல்துறை செக் போஸ்ட் மீது பெட்ரோல் குண்டு வீசிய சம்பவத்தில் தச்சநல்லூர் காவல் நிலையத்தில் 3 பேர் சரணடைந்துள்ளனர்.

★ திருவாரூர் மாவட்டம் முத்துப்பேட்டையில் நியூஸ் ஜெ. தொலைக்காட்சி செய்தியாளர் ஹாஜா முகைதீன் மீது கொடூரத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. கஞ்சா விற்பனை செய்யும் கும்பல் இதனைச் செய்துள்ளது. வீடுபுகுந்து தாக்கி இருக்கிறார்கள். தாக்கியதுடன், அவரின் செல்போனையும் பறித்துச் சென்றுள்ளது. செய்தியாளர் உயிருக்கு ஆபத்தான நிலையில் தஞ்சை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

**- இதுதான் விஜய் சாரின் ஒருவார ‘சர்க்கார்’. தினந்தோறும் பதற்றம். பதறப் பதற பதற்றம். தூய சக்தி ஆட்சியில் குற்ற சக்திகள் பெருகிவிட்டார்கள்.**

## திராவிடச் சிந்தனை நோக்கி இளைஞர்களை ஈர்த்த


# அயோத்திதாசரின் வழியில் பயணிப்போம்!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு

**சென்னை, மே 21-**

**திராவிடச் சிந்தனை நோக்கி இளைஞர்களை ஈர்த்த அயோத்திதாசரின் வழியில் பயணிப்போம் என்று திராவிடப் பேரொளி அயோத்தி தாசரின் 181 வது பிறந்தநாளையொட்டி, கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.**

அயோத்திதாசர் அவர்களின் பிறந்த தினத்தை முன்னிட்டு சென்னை கிண்டியில் உள்ள அவரது திருவுருவச் சிலைக்கு கழகத் தலைவர் மாலை அணிவித்து மரியாதை செலுத்திய பின்னர் சமூக வலைதளப் பதிவில் அவரது பதிவு வருமாறு:-



**சாதியெனும் இருள் அகற்றிடத் தோன்றிய திராவிடப் பேரொளி அயோத்திதாசரின் புகழ் ஓங்குக!**

**மயங்கிக் கிடந்த நம் இனம் விழித்தெழ, புரட்சிகரச் சிந்தனைகளை விதைத்த திராவிட இயக்கத்தின் முன்னோடி பண்டிதர் அயோத்திதாசர் அவர்கள்.**

**அவருக்குத் திருவுருவச் சிலையும் மணிமண்டபமும் அமைத்தது;**

**அவரது பெயரில் குடியிருப்பு மேம்பாட்டுத் திட்டம் உருவாக்கியது உள்ளிட்டவை DravidianModelக்குக் கிடைத்திட்ட பெரும் பெருமை!**

**சாதிபேதமற்ற சமுதாயத்தைக் கட்டமைத்திட, ‘தமிழன்’, ‘திராவிடன்’ ஆகிய சொற்களை அரசியல் களத்தில் ஆயுதமாகப் பயன்படுத்திய அயோத்திதாசரின் சிந்தனைகள் நீடு வாழ வேண்டும்! திராவிடச் சிந்தனை நோக்கி இளைஞர்களை ஈர்த்த அவரது வழியில் பயணிப்போம்! தமிழ்ச் சமூகம் மேன்மையுற தொடர்ந்து பாடுபடுவோம்!**

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

## எக்காரணம் கொண்டும் கல்வியை விட்டு விலகாதீர்!

# 10ஆம் வகுப்பு தேர்வில் வெற்றி பெற்றவர்களுக்கு வாழ்த்து!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

**சென்னை, மே 21-**

**10ஆம் வகுப்புப் பொதுத்தேர்வில் வெற்றி பெற்றவர்களுக்கு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்:-**

இது தொடர்பாக கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

பத்தாம் வகுப்புப் பொதுத்தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ள அனைத்து மாணவர்களுக்கும் வாழ்த்துகள்!

உங்க Careerஐ உருவாக்கிக்கொள்ளத் தேவையான அடித்தளத்தைச் சரியா அமைச்சுக்க வேண்டிய தருணம் இது.

இந்த முறை தேர்ச்சி பெறத் தவறியவர்கள், அடுத்தடுத்த வாய்ப்புகளைப் பயன்படுத்திக்கொண்டு அடுத்த கட்டத்தை நோக்கி நகர வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் கல்வியை விட்டு விலகிடாமல், நல்லா படிச்சு, நல்ல நிலைக்கு முன்னேறிடணும்னு வாழ்த்துகிறேன்.

இவ்வாறு கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

## சென்னை உயர்நீதிமன்றத்திற்கு

# 19 புதிய நீதிபதிகள் நியமனம் !

## உச்ச நீதிமன்ற கொலிஜியம் ஒப்புதல்!

*சென்னை, மே 21-*

*சென்னை உயர் நீதிமன்றத்தில் நீதிபதிகள் காலியிடங்கள் 23 ஆக இருந்த நிலையில் 19 புதிய நீதிபதிகளை நியமிக்க உச்ச நீதிமன்ற கொலிஜியம் ஒப்புதல் அளித்துள்ளது.*

*சென்னை உயர் நீதிமன்றத்தின் மொத்த நீதிபதிகளின் எண்ணிக்கை 75. ஆனால், தற்போது 52 நீதிபதிகள் மட்டுமே உள்ளனர். இந்த மாதம் இறுதியில் மூத்த நீதிபதி ஆர். சுரேஷ்குமார் ஓய்வு பெறுவதால் நீதிபதிகளின் எண்ணிக்கை 51 ஆக குறைந்துவிடும். 24 நீதிபதிகளின் பதவிகள் காலியாக உள்ளன.*

*நீதிபதிகளின் காலி பணியிடத்தை விரைந்து நிரப்ப வேண்டும் என்று கடந்த 2 ஆண்டுகளாக கோரிக்கைகள் வைக்கப்பட்டுள்ள நிலையில் உச்ச நீதிமன்ற கொலிஜியம் 19 புதிய நீதிபதிகளுக்கு ஒப்புதல் அளித்து ஒன்றிய அரசின் பரிசீலனைக்கு அனுப்பியுள்ளது. உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி சூர்ய காந்த் தலைமையிலான கொலிஜியத்தின் கூட்டம் நேற்று நடைபெற்றது.*

*இந்த கூட்டத்தில் சென்னை உயர் நீதிமன்றத்திற்கு கடந்த 2005 முதல் பரிந்துரை செய்யப்பட்ட 19 நீதிபதிகளுக்கு பதவி வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டது.*

*மாவட்ட நீதிபதிகளிலிருந்து பரிந்துரைக்கப்பட்டவர்களில் பி.முருகன், எம்.டி.சுமதி, எஸ். அல்லி, திருமகள் சந்திரசேகர், தர்மலிங்கம் லிங்கேஸ்வரன், கார்த்திகேயன் பாலதாண்டாயுதம், சண்முகம் கார்த்திகேயன், பாலுச்சாமி முருகேசன், குணசேகரன் ஆகிய 9 பேரை உயர் நீதிமன்ற நீதிபதிகளாக நியமிக்க கொலிஜியம் ஒப்புதல் தந்துள்ளது.*

*வழக்கறிஞர்கள் பிரிவில் இருந்து வழக்கறிஞர்கள் என்.ரமேஷ், ஜி.கே.முத்துக்குமார், ராஜேஷ் விவேகானந்தன், சங்கரநாராயணன் ரவிக்குமார், நாகராஜன் திலீப்குமார், இ. மனோகரன், கிருஷ்ணசாமி கோவிந்தராஜன், ரஜினிஷ் பதியில், கே.அப்பாதுரை, ஆர். அனிதா ஆகியோரை நீதிபதிகளாக நியமிக்க கொலிஜியம் ஒப்புதல் தந்துள்ளது.*

*இந்தப் பட்டியலில் இடம் பெற்றுள்ளவர்களை ஒன்றிய அரசின் பரிசீலனைக்கு பிறகு ஜனாதிபதி திரவுபதி முர்மு நீதிபதிகளாக நியமிப்பதற்கான ஆணையை பிறப்பிப்பார். விரைவில் இந்த நடைமுறைகள் தொடங்கவுள்ளது.*



திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மண்டவாடி ஊராட்சியில் வாக்காளர்களுக்கு அர.சக்கரபாணி எம்.எல்.ஏ. நன்றி தெரிவித்துப் பேசினார்.